1980 ஜூலை 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 222வது விதியின் கீழ், 1980-81 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்,''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(இ) பொது நிறுவனங்கள் குழு—தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார். மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 235-வது விதியின் கீழ், 1980—81 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(ஈ) உரிமைக் குழு தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழயன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 245-வது விதியின் கீழ். 1980—81 ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப் பினர்களாக இருக்கும்படி பதினான்கு உறுப்பினர்களை மாண்பு மிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தேடுக்கும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பொற்று, நிறை வேற்றப்பெற்றது.

(2) அவைக் குழு தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 288 (1)-வது விதியின் கீழ், 1980–81-ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத்தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

7. அறிவிப்பு

பேரவைக் குழுக்கள், தேர்தல் நடைமுறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்குமுறைப்படி, தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் மதிப்பீட்டுக் குழு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி) பொதுக்கணக்குக் குழு (பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி) பொதுநிறுவனங்கள் குழு (பப்ளிக் அண்டர் டேக்கிங்ஸ் கமிட்டி) உரிமைக் குழு (கமிட்டி ஆப் பிரிவிலேஜஸ்) அவைக்குழு (ஹவுஸ்கமிட்டி) ஆகியவற்றிக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 1980–ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 22ம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3·00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள் செயலர்ளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 1980–ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23-ம் நாள், புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1980–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25–ம் நாள், வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28–ம் நாள் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கும் பகல் 1.00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.